பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | சித்திரை 02 புதன்கிழமை 15.04.2020 | கதிர் 29

# வடக்கில் மக்கள் அஞ்சவேண்டாம்!

## எனினும், விழிப்புடன் இருப்பது அவசியம் என்கின்றார் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணம்,ஏப்.15

வடக்கில் கொரோனா தொற்றுசமூகத்தில் பரவவில்லை. அதனால் மக்கள் அச்சமடையத் தேவையில்லை. எனினும், விழிப்புடன் இருப்பது அவசியம் எனத் தெரிவித்துள்ளார் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி.

எனினும், ஊரடங்கு நிலைவரம் மற்றும் கொரோனாவின் எதிர்காலம் பற்றி தெளிவாகக் கூற முடியாது. இது உலகளாவிய தொற்று நோய் என்றும் அவர் கூறினார். 2



## 233 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஏப். 15

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 233 ஆக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 233 ஆக உயர்ந்துள்ளது. 2

## ஊரடங்கு இன்று தளர்வு

கொழும்பு, ஏப். 15

யாழ்ப்பாணம் உட்பட 6மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய 19 மாவட்டங்களில் நாளை ஊரடங்கு தளர்த்தப்படவுள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு 19 மாவட்டங்களில் இன்று காலை 6 மணிக்குத் தளர்த்தப்பட்டு மாலை 4 மணிக்கு மீண்டும் அமுலாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 2

## வவுனியா குளத்தில் மூழ்கி ஒருவர் சாவு!

வவுனியா, ஏப். 16

வவுனியா மயிலங்குளம் குளத்தில் மூழ்கி ஒருவர் இன்று மதியம் உயிரிழந்தார்.

மயிலங்குளம் குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற நகுலேஸ் (வயது - 43) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே மரணமடைந்துள்ளார்.

ஆசியகுளம் பகுதியைச் சேர்ந்தவரான இவர் மீன் பிடிப்பதற்குச் சென்ற வேளை குளத்தில் மூழ்கியுள்ளார். 2

## அமைச்சரவை இவ்வாரம் இல்லை

இந்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அண்மைய விடுமுறைகளைக் கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.அடுத்த அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## 8 பேரின் மாதிரிகள், அறிக்கைகள் அநுராதபுரத்துக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 15

பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தவர்களில் நேற்றைய தினம் தொற்றுக்கு உள்ளானவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களின், மருத்துவ மாதிரிகள் மற்றும் அறிக்கைகள் அனுராதபுரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 2

## கிளிநொச்சிக்கு வரும் வாகனங்கள் தொற்று நீக்கிய பின்னரே அனுமதி



கிளிநொச்சிக்கு வருகை தரும் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் தொற்று நீக் கிய பின்னர் அனுமதிக்கப் படுகின்றனர். இன்று காலை முதல் முறிகண்டிப்பகுதியில் அமைந்துள்ள சோத னைச் சாவடியில் இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டது. 2

## 28,441 பேர் கைது

கொழும்பு, ஏப். 16

இன்று காலை 6 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையான காலப்பகுதியில் ஊரடங்கு உத்தரவை மீறிய 282 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 82 வாகனங்களும் மீட்கப்பட்டன பொலிஸ் 2

## வாழைத்தோட்டத்தின் ஒரு பகுதி மூடப்பட்டது



கொழும்பு, ஏப். 15

கொழும்பு குணசிங்கபுர முஹாந்திரம் ஒழுங்கை (மிஹிந்து மாவத்தை பின்புறம்) பகுதி இன்று காலை மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2

## பாதுகாப்புச் செயலாளர் நாளை யாழ் வருகை



பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகைத்தரவுள்ளார். யாழ். வரும் அவர் வடக்கில் முப்படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் கொரோனா 2

## 133 கிலோ கஞ்சாவுடன் மூவர் மணல்காடு கடற்பரப்பில் கைது

### பருத்தித்துறை இளைஞர்கள் எனத் தகவல்

மணல்காடு கடற்பரப்பில் 133 கிலோ 57 கிராம் கேரள கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கஞ்சா தொகையை இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த மூவரே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி சுமார் 2 கோடி எனக் கடற்படையினர் தெரிவித்தனர். 2

## கொரோனா வைரஸ் சோதனைக்காக சிறையில் தனிமைப்படுத்தலில் ரஞ்சன்

கொரோனா வைரஸ் பரிசோதனைக்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக பொலிஸாரின் பணிக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு 20ஆம் திகதிவரை விளக்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், நீர்கொழும்பு, தலுபொத்த பிரதேசத்தில் அமைந்துள்ள இளம் குற்றவாளிகள் சீர்திருத்த நிலையத்தில் கொரோனா வைரஸ் பரிசோதனைக்காக அவர் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறைத்தண்டனை பெறும் கைதிகள் சிறைக்கு அனுப்பப்பட முன்னர் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவது இப்போது நடைமுறையில் உள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 8 பேரின் மாதிரி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுவிஸ் நாட்டில் இருந்து வந்த மத போதகருடன் நெருக்கமான தொடர்பை பேணிய 20 பேர் பலாலி தனிமைப்படுத்தல் முகாமில் கடந்த 22ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

அவர்களைக் கடந்த 1ஆம் மற்றும் 2ஆம் திகதிகளில் பத்து பத்து பேராக பரிசோதனைக்கு உட்படுத்தியபோது , முதல்நாள் 3 பேர், மறுநாள் 3 பேர் என 6 பேர் கோறொனோ தொற்றுக்கு உள்ளானார்கள் என அடையாளம் காணப்பட்டனர். 14 பேர் தொற்று இல்லை என அடையாளம் காணப்பட்டனர்.

அன்றைய தினம் அடையாளம் காணப்படாத 14 பேரையும் இரண்டாம் கட்டமாக நேற்றைய தினம் பரிசோதித்தபோது , அவர்களில் 08 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

அந்நிலையில் மேலதிக பரிசோதனைக்காக அந்த 8 பேரினுடைய மருத்துவமாதிரிகள் மற்றும் பரிசோதனை அறிக்கைகள் என்பவற்றை யாழ்.போதனா வைத்திய சாலை ஊடாக அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## 133 கிலோ ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நபர்கள் பருத்தித்துறை பகுதியில் வசிக்கும் 22, 26 மற்றும் 37 வயதுடையவர்கள் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வவுனியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு 1990 அவசர நோயாளர் காவு வண்டியூடாக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பினர். அவர் ஏற்கனவே இறந்துள்ளமை தெரியவந்துள்ளது.

## 19 மாவட்டங்க...

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி ஆகிய ஆறு மாவட்டங்களில் விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

மக்களின் நலன் கருதி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், மக்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்படுமாறும் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தியாவசிய சேவை தவிர்ந்த வேறு விடயங்களுக்காக மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன், ஊரடங்கு உத்தரவை மீறுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 233 பேருக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாட்டில் இனங்காணப்பட்ட 15 கொரோனாத் தொற்றாளர்களில், சுவிஸ் போதகருடன் நெருக்கமாகப் பழகிய நிலையில் யாழ்ப்பாணம் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 8 பேரும், கிளிநொச்சி - முழுங்காவில் கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் 4 பேரும் உள்ளடங்குகின்றனர்.

நேற்று மாத்திரம் நாட்டில் 15 பேர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டனர்.

இதனையடுத்து கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 233ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாழைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் தப்பிவந்து இந்தப் பகுதியில் இருந்தார் எனவும் அவருடன் பழகியிருந்த இருவர் இந்தப் பகுதியில் இருந்து சுகாதாரப் பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டனர் எனவும் அதையடுத்து இந்தப் பகுதி மூடப்பட்டது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கிளிநொச்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவாழ்வு சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில் இந்தச் செயற்திட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது. பிற பிரதேசங்களிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் சுத்திகரிப்பின் பின்னர் அனுமதிக்கப்பட்டன.

இந்தச் செயற்திட்டம் நாளை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும்போது கிளிநொச்சி நகரில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் மக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்போதனா வைத்தியசாலையில் இன்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொரோனா தொற்றில் அதிகமானவர்கள் தொற்றுக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தாதவர்களாக இருந்திருப்பார்கள். ஆனால் நோய்க்காவிகளாக இருப்பார்கள். இதில் எல்லோரும் அவதானமாக இருக்க வேண்டும். தனிமைப்படுத்தல் முகாமில் இவர்கள் அடையாளம் காணப்பட்டதால் பிரச்சினையில்லை. ஆனால், சமூகத்தில் யாருக்காவது அறிகுறியில்லாமல் தொற்று ஏற்பட்டிருந்தால் அது வேறு ஒருவருக்கு பரவினால், மற்றவர்களுக்கும் பரவக்கூடிய நிலைமையுள்ளது.

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலை தொடர்பாக ஜனாதிபதி செயலணி முடிவுகளை எடுக்கிறது. எமது கருத்துக்களைக் கேட்கும்போது, நிலைவரங்களை தெரிவிக்கிறோம்.

ஊரடங்கு பற்றி, நோயின் எதிர்காலம் பற்றி உடனடியாகக் கூறிவிட முடியாது. பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஏனெனில் இது உலகளாவிய தொற்று.

நேற்று அடையாளம் காணப்பட்டவர்கள் தனிமைப்படுத்தல் மையத்திலிருந்தே அடையாளம் காணப்பட்டனர். கொரோனா தொற்று வடக்கில் - எமது சமூகத்தில் பரவவில்லையென்பது தெரிகிறது. என்றாலும், நாம் அவதானமாக இருக்கவேண்டும்.

பி.சி.ஆர். பரிசோதனைக்குத் தேவையான கிட்ஸ் ஓரளவுக்கு கையிருப்பில் உள்ளது. மத்திய அரசு மூன்று நாளுக்கு ஒருமுறை அவற்றை எமக்கு வழங்கி வருகிறது. யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள இயந்திரத்தின் மூலம் நாளொன்றுக்கு 72 பரிசோதனை செய்யலாம். விரைவில் யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள இயந்திரம் மூலமும் பரிசோதனை மேற்கொள்ளவுள்ளோம். அங்கும் நாளொன்றுக்கு 72 பேருக்கு பரிசோதனை மேற்கொளலாம் - என்றார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் மையத்தில் தொற்று ஏற்பட்டதா எனசெய்தியாளர்கள் கேள்வியெழுப்பியபோது,

தனிமைப்படுத்தல் செயற்பாட்டை இராணுவமும், சுகாதார அமைச்சும் மேற்கொள்கிறார்கள். இதுபற்றி என்னால் தெளிவாகக் கூற முடியா விட்டாலும், போதகருடன் நெருக்கமாக பழகியவர்கள் என்ற அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள்.

ஆகையால் எந்த வழியால் தொற்றிற்குள்ளானார்கள் என்பதை என்னால் தெளிவாகக் கூற முடியாது. ஆனால், அங்கு தொற்று ஏற்பட்ட ஒருவர் ஊடாக மற்றவர்களுக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகம் நிலவுகிறது - என்றார்.

# கிளிநொச்சியி தொற்று இல்லை ஆகவே வீண் அச்சம் வேண்டாம்!

## மக்களுக்குத் தைரியமூட்டுகின்றார் அரச அதிபர்

கிளிநொச்சி, ஏப்ரல் 15

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரைக்கும் எவருக்கும் கொரோனா தொற்றில்லை, முழங்காவில் நாச்சிக்குடா கடற்படை தனிமைப்படுத்தல் நிலையத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் எவரும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் எனக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.




இன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வைத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி முழுங்காவில் நாச்சிக்குடா கடற்படை தனிமைப்படுத்தல் முகாமுக்கு கடந்த 13 ஆம் திகதி ஜா - எல, மட்டக்குளி, ராகம பிரதேசங்களில் 32 பேர் மேற்படி கடற்படை தனிமைப் படுத்துல் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டனர். இவர்களில் ஆறுபேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக மக்கள் மத்தியில் தவறான செய்தி பரவியதனை அடுத்து அவர்களிடத்தே அச்சம் ஏற்பட்டது. எனவே இது தொடர்பில் மக்களிடம் ஏற்பட்டுள்ள அச்சத்தை தவிர்க்கும் வகையில் மாவட்ட அரச அதிபரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில் -

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரைக்கும் எவருக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லை. அதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம். சுகாதார பிரிவினர் ஆலோசனைகளைப் பின்பற்றி நோய் வருமுன் காக்கும் பணிக்கும் ஒத்துழைப்பு தருங்கள். - என்றார்.

# பலாலியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஏனையோருக்கு இன்றும் பரிசோதனை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப். 15

பலாலி மற்றும் முழுங்காவிலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஏனையவர்களுக்கு இன்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் அதன் முடிவுகளும் இன்று வெளிவருமென எதிர்பார்ப்பதாகவும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இன்று காலை நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

யாழ்ப்பாணம் பலாலி தனிமைப்படுத்தல் பகுதியில் இருந்த 14 பேருக்கு நேற்று ஆய்வு கூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதில் 8 பேருக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதே போல முழுங்காவிலில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களில் 8 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 4 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு நேற்று பரிசொதனையில் தொற்றுக்கு உள்ளானவர்கள் இன்று மேலதிக சிசிக்சைக்காக வெலிகந்தை வைத்தியசாலைக்கும் அதைத் தவிர சிலாபம் பகுதியில் உள்ள இரணவில வைத்தியசாலைக்கும் அனுப்பி வைக்கப்பட இருக்கின்றார்கள்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே 7 பேர் வைரஸ் தொற்றில் அடையாளம் காணப்பட்டிருக்கின்ற நிலையில் நேற்று அடையாளம் காணப்பட்ட 8 பேருடன் சேர்த்து மொத்தமாக 15 பேர் வடக்கில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆயினும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 7 பேரதும் உடல் நிலை தேறிவருவதாகவும் அவர்கள் விரைவில் வீடுகள் செல்லக் கூடியதாக இருப்பதாகவும் அங்கிருக்கும் வைத்திய சாலை தரப்பினர்கள் எங்களுக்கு தெரியப்படுத்தி இருக்கின்றனர்.

முழங்காவிலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 8 பேரில் 4 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனைய நான்கு பேருக்கும் இன்றும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அதே போலவே பலாலியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் ஒருவருக்கு இன்று பரிசோதனை மேற் கொள்ளப்பட இருக்கின்றது.

இந்தப் பரிசோதனைகளின் முடிவுகள் இன்று வெளிவருமென்றும் எதிர்பார்க்கிறோம் - என்றார்.

## 28,441 பேர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இதுவரை நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவை மீறிய 28, 441 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பாதுகாப்புச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராயவுள்ளார் .

விசேடவிமானம்மூலம் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தை வந்தடையவுள்ள பாதுகாப்புச் செயலாளர் யாழ்ப்பாணம் பலாலி பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தில் வடக்கின் ஐந்து மாவட்ட இராணுவத் தளபதிகள், உயரதிகாரிகள் மற்றும் படை வீரர்களுடன் சந்திப்பை மேற்கொள்ளவுள்ளார். யாழ்ப்பாணம் கொரோனா இடர்வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் இங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் ஆராயவுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்களுடன் பேசுங்கள்...!

குளிக்கப் போய் சேறு பூசிக் கொள்வது பற்றிய பேச்சு நம் மத்தியில் உண்டு.

கொரோனா தொற்றுப் பரவலுக்கு எதிரான போராட்டத்திலும் அப்படி ஒரு விடயம் நடக்கின்றதோ என்ற சந்தேகம் - ஐயம் - மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

தனிமைப்படுத்தல் மையம் என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கை அதன் நோக்கத்துக்கு மாறாக, கொரோனாப் பரவல் மையங்களாக மாறிவிட்டனவோ என்ற மயக்கம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

பலாலி தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்தவர்களில் எட்டுப் பேருக்கு கொரோனாத் தொற்று இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக வெளியான தகவல்கள் மக்கள் மத்தியில் - ஏன் கற்றறிந்தவர்கள் மத்தியிலேயே கூட - அத்தகைய சந்தேகத்தைத் தோற்றுவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரியாலைப் பகுதியில் கடந்த 15ஆம் திகதி ஆராதனை நடத்திய சுவிஸ் போதகரோடு நெருக்கமாக பழகியவர்கள் என்று கருதப்பட்ட இருபது பேர் பலாலி தனிமைப்படுத்தல் மையத்தில் கடந்த மார்ச் 23ஆம் திகதி முதல் தங்க வைக்கப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் ஏப்ரல் முதலாம், மூன்றாம் திகதிகளில் முதல் கட்டப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது மானிப்பாயைச் சேர்ந்த போதகர் ஒருவர் உட்பட 6 பேருக்குத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டு அவர்கள் சிகிச்சைக்காக இடம் மாற்றப்பட்டனர்.

இந்த நிலையில் எஞ்சிய பதினான்கு பேருக்கு நேற்று இரண்டாம் கட்டப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது அதில் எட்டுப் பேருக்குத் தொற்று இருப்பது - அவர்களில் அந்நோயின் குணங்குறி வெளியில் காட்டப்படாத நிலையில் - கண்டுப்பிடிக்கப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கின்றது.

அதாவது, அரியாலையில் ஆராதனை நடைபெற்று ஒரு மாதத்தின் பின்னர் குணங்குறி வெளிப்படுத்தாத நிலையில் தொற்றிருப்பது சோதனைகளில் அம்பலமாகியிருக்கின்றமை, இந்தத் தொற்று அரியாலை ஆராதனை சமயமோ - அல்லது அதை நடத்திய போதகரிடமிருந்து நேரடியாகவோ - தொற்றியதாக இருக்க முடியாது என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது.

அதாவது, தனிமைப்படுத்தல் மையங்களில் மடக்கப்படுவோர் அங்குதான் இத்தகைய தொற்றை மற்றவரிடம் பெற்றுக்கொள்கின்றனரோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதை நன்கு உணரமுடிகின்றது.

தனிமைப்படுத்தல் இரண்டு விதமாக நடக்கின்றது. ஒன்று - அவர்களை அவரவர்கள் வீட்டில் தனிமைப்படுத்துவது. மற்றையது - தனிமைப்படுத்தல் மையங்களில் தனித்து வைத்திருப்பது.

உதாரணமாக தாவடி, அரியாலை போன்ற இடங்களில் மக்களைத் தத்தமது வீடுகளில் தடுத்து வைத்திருப்பது முதலாவது ரகம். அந்த முறைமை குறித்து பெரும் குற்றச்சாட்டுகள், குறைகள் கூறப்படவில்லை. மாறாக, தாங்கள் உரிய முறையில் கௌரவமாகக் கவனிக்கப்பட்டனர், உபசரிக்கப்பட்டனர் என்றே அந்தத் தனிமைப்படுத்தலுக்குள் மாட்டிக்கொண்டவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் தனிமைப்படுத்தல் மையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் நிலைமை அப்படியல்ல. அங்கு ஏற்கனவே சந்தேகத்தில் கொண்டு செல்லப்பட்டவருடன் புதியவர்கள் அல்லது ஏனையோர் தொற்றுக்கான தொடர்பைக் கொள்ளாமல் இருப்பதற்கான ஏற்பாடுகள், வசதிகள், ஒழுங்கு முறைகள் உள்ளனவா என்பது குறித்து முரண்பாடான தகவல்களே வெளியாகின்றன.

தனிமைப்படுத்தல் மையங்களே தொற்று உருவாக்கும் நிலையங்கள் என்ற சந்தேகம் மக்கள் மனதில் பதியுமானால் இனித் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு செல்லாமல் 'டிமிக்கி' கொடுப்பதே புத்திசாலித்தனம் என்ற எண்ணம் மக்கள் மனதில் ஊன்றிவிடும்.

மக்களின் இந்தச் சந்தேகத்துக்கான தெளிவுபடுத்தலை மருத்துவ, சுகாதாரத் துறையினர் தமது வெளிப்படையான பேச்சுகள், அறிக்கைகள், தெளிவுபடுத்தல்கள் மூலம் வழங்க முன்வரவேண்டும்.

குறைந்த பட்சம் ஊடகங்கள் மூலமாவது அவர்கள் மக்களுடன் உரையாட வேண்டும். மக்களின் இந்தச் சந்தேகங்கள் குறித்து தெளிவுபடுத்தல்களை விளக்கமாக மேற்கொள்ள வேண்டும்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதன் வெற்றி, மக்களின் ஒத்துழைப்பிலும் பங்களிப்பிலும்தான் தங்கியுள்ளது.

அதைப் பெறுவதாயின் மக்களுடன் மனம் திறந்து உரையாடுங்கள்.

இது சுகாதார - மருத்துவ அதிகாரிகளின் கவனத்துக்கு சமர்ப்பணம்..!

# கொரொனா ஊரடங்கு வேளையில் வீட்டிலேயே சிறுவர் சித்திரக் காட்சி





நேற்று வருடப்பிறப்பு நாளில் தொடர் ஊரடங்கு வேளையில் அல்வாயில் வீட்டுச்சூழல் ஒன்றில் தங்கள் சிறுவர்கள் வரைந்த சித்திரங்களை சுவரில் ஒட்டி காட்சிப்படுத்தி மகிழ்ந்தனர் வீட்டாரும் உறவினரும். அவற்றில் கொரோனாக் காலத்தில் காலைக்கதிர் பத்திரிகைக்கு சிறுவர் சித்திரங்களுக்கு அனுப்பி பாராட்டுப் பெற்ற சித்திரங்களும் அதிகம் காட்சிப்படுத்தியிருந்தனர்.

"இன்றைய சித்திரை வருடப் பிறப்பு, என் வீட்டுச் சூழலில் சிறார்களின் சித்திரங்களால் அழகுபெற்றது. இவற்றை வரைந்த என்வீட்டுச் சிறார்கள் இ.சிந்துரிக்கா, த.ஆரூசன், இ. பவிசான், உ. சபீனா, கு. கேசவன், கு. ஆதி ஆகியோருக்கு பாராட்டுக்கள்." - என்று குறிப்பிட்டார் குடும்பத் தலைவர்.

# கொரோனாவுக்கு மத்தியில் டெங்கும் பீதியைக் கிளப்பும்

கொழும்பு,ஏப்.15

பருவப்பெயர்ச்சிமழைஆரம்பமாகியுள்ளதனால் டெங்கு நோய் பரவக்கூடும் என்று தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.


இதனால் நுளம்புகள் பெருகும் இடங்கள், தூய்மையான நீர் இருக்கும் பகுதிகள், மழைநீர் வழிந்தோடும் குழாய்கள் மற்றும் வீட்டை சூழவுள்ள பகுதிகளைச் சுத்தமாக வைத்திருப்பதில் பொதுமக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் கூறினார்.

ஊரடங்கு சட்டம் காரணமாக, சூழல் மற்றும் வீட்டைத் தூய்மையாக வைத்திருப்பதற்கான சந்தர்ப்பம் பொது மக்களுக்கு கிட்டியுள்ளது. இதனால் இவ்விடயம் தொடர்பில் பொது மக்கள் கூடுதலாகக் கவனம் செலுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

டெங்குநுளம்புகள்பரவும்வளாகங்களை சுத்தப்படுத்தி, டெங்கு நோய் அனர்த்தத்தை நீக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிப்பாளர் டொக்டர் அருண ஜயசேகர பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

வறட்சியான காலநிலை காரணமாக, இந்த ஆண்டின் முதல் காலாண்டில் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தூரப் பிரதேசங்களுக்கு ரயில் மூலம் அத்தியாவசியப் பொருள்கள், மரக்கறி



தூரப் பிரதேசங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களையும், மரக்கறி வகைகளையும் கொண்டு செல்வதற்காக ரயில்களை பயன்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தீர்மானித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழல் காரணமாக நாடளாவிய ரீதியில் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் காரணமாக மக்கள் தமது அன்றாட உணவுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர் கொள்கின்றனர்.

இதனால் தூரப் பிரதேசங்களுக்கு அத்தியாவசியப் பொருள்களையும், மரக்கறி வகைகளையும் கொண்டு செல்வதற்காக ரயில்களைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக விவசாயிகளிடமிருந்து பழங்கள் மற்றும் காய்கறி வகைகளை கொள்வனவு செய்யும் இரண்டாம் கட்ட பணிகள் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகள் அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் நடைபெறவுள்ளன எனவும் அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு சேகரிக்கப்படும் பொருள்களே ரயிலில் மற்றைய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீரவால் ரயில்வேத் திணைக்கள மற்றும் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




# தொற்றை உடன் கண்டறியும் ‘கிட்’ 37 லட்சம் வாங்க இந்தியா முடிவு!

கொரோனா வைரஸ் தொற்றை உடனடியாகக் கண்டறியும் வகையில் முதல்கட்டமாக 37 லட்சம் விரைவுப் பரிசோதனைக் கருவிகளை(கிட்) வாங்க இந்திய சுகாதாரத் துறை முடிவு செய்துள்ளது.

கரோனா வைரஸ் தொற்றை உறுதி செய்ய பிசிஆர் (பாலி மரேஸ் செயின் ரியாக்ஷன்) பரிசோதனை நடத்தப்படுகிறது. இதன்படி ஒருவரின் தொண்டை, மூக்கில் இருந்து மாதிரி சேகரிக்கப்பட்டு வைரஸ் தொற்று உள்ளதா என்பது கண்டுபிடிக்கப்படுகிறது. இந்த பரிசோதனையின் முடிவை அறிய சுமார் 48 மணி நேரம் ஆகிறது.

இந்தியாவில் தற்போது கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருவதால் 'ஆன்டிபாடி' எனப்படும் விரைவு பரிசோதனையை இந்தியமருத்துவ ஆராய்ச்சி சபை (ஐசிஎம்ஆர்) அறிமுகம் செய்கிறது. இது குருதியை அடிப்படையாகக் கொண்ட சோதனை. குருதியில் உள்ள செல்களை நீக்கிய பிறகு 'சீரம்' எனும் திரவம் கிடைக்கும். அதில் ‘ஆன்டிபாடிகள்’ இருக்கிறதா என்று சோதித்து அறியப்படும்.

அதாவது, யாருக்காவது நோய் தொற்று ஏற்பட்டிருந்தால் அவர் களது குருதியில் ‘ஆன்டிபாடிகள்’ உருவாகி இருக்கும். இதன்மூலம் அந்த நபர் நோய் தொற்றுக்கு ஆளாகி இருக்கிறார் என்பதைக் கண்டறியலாம். இந்த பரிசோதனையில் அரை மணி நேரத்தில் முடிவை அறிந்துகொள்ள முடியும். எனினும் பிசிஆர் பரிசோதனை நடத்திய பிறகே கொரோனோ வைரஸ் தொற்றை உறுதி செய்ய முடியும்.

‘ஆன்டிபாடி’ விரைவு பரி சோதனைக்காக சுமார் 44 லட்சம்கருவிகளை கொள்முதல் செய்யமத்திய சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது.

ஒரே நேரத்தில் 5 குருதி மாதிரிகளைப் பரிசோதனை செய்யவும் ஐசிஎம்ஆர் அனுமதி வழங்கியுள்ளது. இதன் மூலம் அதிக பரிசோதனைகளை நடத்த முடியும் என்று சுகாதாரத் துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## வௌவால்களில் கொரோனா இந்திய ஆய்வில் தெரிவிப்பு!

இந்தியாவின் 4 மாநிலங்களில் வசிக்கும் வௌவால்களிடமிருந்து எடுத்த மாதிரிகளில் 2 மாதிரிகளில் கொரோனா வைரஸ் இருப்பதை இந்திய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.



சீனாவின் வுஹான் நகரில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ் அங்குள்ள ‘வெட் மார்க்கெட்’எனப்படும் சட்ட விரோத இறைச்சிச் சந்தையில் இருந்தே பரவி இருக்கக் கூடும் என்று அறிஞர்கள் சந்தேகம் வெளியிட்டிருந்தனர். இதுவரை ஆதார ரீதியாக இது உறுதிப்படுத்தப்படவில்லை.

வௌவ்வால்கள் மூலம்தான் கொரோனா பரவியிருக்கக்கூடும் என்று சீன விஞ்ஞானிகள் கருதும் நிலையில் இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையைச் (ஐசிஎம் ஆர்) சேர்ந்த விஞ்ஞானிகள்

வவ்வால்களின் தொண்டையில் இருந்து எடுத்த மாதிரியை சோதனை செய்தபோது அதில் 2இல் மட்டும் கொரோனா வைரஸ் இருந்தது தெரியவந்துள்ளது என ஐசிஎம்ஆர் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

கேரளா, இமாச்சலபிரதேசம், புதுச்சேரி, தமிழகம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் வவ்வால்களிடமிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டன. இதில் 2 மாதிரிகளில் கரோனா வைரஸ் இருந்தது. கர்நாடகா, சண்டிகர், குஜராத், ஒடிசா, பஞ்சாப், தெலங்கானா ஆகிய மாநிலங்களில் வசிக்கும் வவ்வால்களிடமிருந்து எடுத்த மாதிரியில், கொரோனா வைரஸ் தென்படவில்லை என அந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.



# இந்தியாவில் தொற்று எண்ணிக்கை 11 ஆயிரத்தைத் தாண்டி எகிறுகிறது!

இந்தியாவில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸின் பாதிப்பும், உயிரிழப்பும் அதிகரித்து வருகின்றன, கடந்த 24 மணிநேரத்தில் 38 பேர் உயிரிழந்துள்ளனர், ஆயிரத்து 76 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் துறை அமைச்சகம் இன்று காலைத் தெரிவித்தது.

இன்று மதியம் வரையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர்எண்ணிக்கை 11 ஆயிரத்தைக் கடந்து 11 ஆயிரத்து 555 ஆக அதிகரித்துள்ளது. மருத்துவமனையில் தங்கி 9 ஆயிரத்து 797 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர், ஆயிரத்து 305 பேர் குணமடைந்துள்ளனர். 306 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

மகாராஷ்டிரா மாநிலத்திலேயே பாதிப்பு அதிகமாக இருக்கின்றது. அங்கு அதிகபட்சமாக 2 ஆயிரத்து 687 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், ஒரே நாளில் 300 பேருக்குமேல் அங்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 259 பேர் குணமடைந்துள்ளனர்.

அதைத் தொடர்ந்து டெல்லியில் ஆயிரத்து 561 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 30 பேர் குணமடைந்துள்ளனர்.

தமிழகத்தில் ஆயிரத்து 204 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், 81 பேர் குணமடைந்துள்ளனர். ராஜஸ்தானில் 969 பேரும், தெலங்கானாவில் 624 பேரும், கேரளாவில் 387 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மத்தியப் பிரதேசத்தில் 730 பேரும், கர்நாடகாவில் 260 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். குஜராத் மாநிலத்தில் 650 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜம்மு காஷ்மீரில் 278, மேற்கு வங்கத்தில் 213, பஞ்சாப்பில் 176, ஹரியாணாவில் 199, பிஹாரில் 66, அசாமில் 32, உத்தரகாண்ட்டில் 37, ஒடிசாவில் 60, சண்டிகரில் 21, சத்தீஸ்கரில் 31, லடாக்கில் 17 பேர் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தமான் நிகோபர் தீவில் 11 பேர், கோவாவில் 7 பேர், இமாச்சலப் பிரதேசத்தில் 33 பேர், புதுச்சேரியில் 7 பேர், ஜார்க்கண்டில் 27 பேர், மணிப்பூரில் 2 பேரும், மிசோரம், அருணாச்சலப் பிரதேசத்தில் தலா ஒருவர் கொரோனாவைரஸால்பாதிக்கப்பட்டுள்ளனர்”. இவ்வாறு இந்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### கூட்டத்திற்கு வந்த நபருக்கு தொற்று ஏற்பட்டதை அடுத்து

# தன்னைத் தானே தனிமைப்படுதினார் குஜராத் மாநில முதலமைச்சர் ரூபானி



தன்னைச் சந்தித்த சட்டசபை உறுப்பினருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது தெரியவந்ததைத் தொடர்ந்து தன்னைத் தானே தனிமைப்படுத்திக் கொண்டார் குஜராத் மாநில முதல்வர்.

குஜராத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாநில முதல்வர் விஜய் ரூபானி தலைமையில் நேற்று உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. காந்தி நகரில் உள்ள முதல்வரின் இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாநிலத் துணை முதல்வர் நிதின் பட்டேல், மாநில உள்துறை மந்திரி பிரதீப்சின் ஜடேஜா மற்றும் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் சிலரும் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற ஹாடியா – ஜமால்பூர் தொகுதி காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர். இம்ரான் கிடவாலாவுக்கு நேற்று மாலை கொரோனா வைரஸ் பரவி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதனால் முதலமைச்சர் தலைமையிலான கூட்டத்தில் பங்கேற்ற மற்றவர்களுக்கும் கொரோனா பரவியிருக்கலாம் என அச்சம் ஏற்பட்டது.

இந்த நிலையில், முதல்வர் விஜய் ரூபானி தன்னை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

இம்ரானுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதும், முதல்வர் விஜய் ரூபானிக்கு கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் அவருக்கு கொரோனா தொற்று இல்லை என்பது தெரியவந்தது.

இருப்பினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர் தன்னைத் தனிமைப்படுத்திக்கொண்டார் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தினமும் 30 கி.மீ. தூரம் சைக்கிளில் பயணித்து

## கொரோனா விழிப்புணர்வு



தெலுங்கானா மாநிலத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ஒருவர், தினமும் 30 கிலோ மீட்டர் தூரம் வரை சைக்கிளில் சென்று கொரோனா குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திவருகிறார்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. கொரோனா வைரஸின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக இந்தியா முழுவதும் மே 3 ஆம் திகதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. நோய் அறிகுறி உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி அவர்களுக்கு உரிய சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகள் தனிமைப் படுத்தப்பட்டு, சுகாதார பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசு பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், பொது மக்கள் சமூக விலகலை கடைப்பிடித்தால் மட்டுமே வைரஸ் மேலும் பரவாமல் தடுக்க முடியும். எனவே, சமூக விலகல் குறித்து மக்களிடம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

அந்த வகையில் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தைச் சேர்ந்த தினேஷ் குப்தா (வயது 47) என்பவர் சைக்கிளில் சென்று மக்களிடம் கொரோனா வைரஸ் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்.

தினமும் 20 முதல் 30 கிலோ மீட்டர் தூரம் சைக்கிள் ஓட்டிச் செல்கிறார். சைக்கிளில் விழிப்புணர்வு பதாகைகளை கட்டியிருக்கிறார். ஊரடங்கு சமயத்தில் மக்கள் வீட்டிலேயே இருக்கும்படி வலியுறுத்தி வருகிறார்.

# உலக சுகாதார நிறுவனத்துக்கான அமெ. நிதி உதவி இடைநிறுத்தம்

கொரோனா விவகாரத்தில் சீனாவுக்கு ஆதரவாக உலக சுகாதார அமைப்பு செயல்பட்டதாக குற்றம்சாட்டி வரும் டிரம்ப் அந்த அமைப்பிற்கு அமெரிக்கா வழங்கி வந்த நிதியை இடைநிறுத்தியுள்ளார்.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் அமெரிக்காவில் கோரத்தாண்டவம் ஆடி வருகிறது.

அந்நாட்டில் 6 லட்சம் பேருக்கு வைரஸ் பரவியுள்ளது. இதுவரை 25 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

உலக அளவில் கொரோனாவுக்கு அதிக பாதிப்பு மற்றும் அதிக உயிரிழப்பை சந்தித்த நாடுகள் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

இதற்கிடையில், சீனாவின் ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸ் மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் என்பது போன்ற பல்வேறு தகவல்களை அந்நாட்டு அரசு மறைத்து விட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தொடர்ந்து குற்றச்சாட்டி வருகிறார்.

வைரஸின் தீவிரத் தன்மை குறித்துப் பிற நாடுகளுக்கு எச்சரிக்கை விடுக்காமல் சீனாவுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்ததாக உலக சுகாதார அமைப்பு மீதும் டொனால்டு டிரம்ப் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

அந்த அமைப்பின் தாமதமான செயல்கள் உலக நாடுகளுக்குப் பல்வேறு பின்விளைவுகளை ஏற்படுத்திவிட்டதாகவும் கூறினார்.

அமெரிக்காவிடம் இருந்து ஆண்டுக்கு பல மில்லியன் டொலர்கள் (கடந்த ஆண்டு 400 மில்லியன் டொலர்கள்) நிதி பெறும் உலக சுகாதார அமைப்பு சீனாவுக்கு ஆதரவாக செயல்பட்டு வைரஸ் விவகாரத்தில் உண்மையை மறைத்ததால் அந்த அமைப்புக்கு வழங்கும் நிதியை நிறுத்த திட்டமிட்டுள்ளதாக அதிபர் டிரம்ப் கடந்த வாரம் தெரிவித்தார்.

வெள்ளைமாளிகையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த டிரம்ப் கொரோனா விவகாரத்தில் உலக சுகாதார அமைப்பின் தவறான நிர்வகிப்பு மற்றும் வைரஸ் குறித்த தகவல்களை உலக நாடுகளுக்கு தெரிவிக்காமல் மூடி மறைத்து தொடர்பாக விரிவான மதிப்பீடு செய்ய தனது நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவித்தார்.

அந்த மதிப்பீட்டு விசாரணை முடியும் வரை உலக சுகாதார அமைப்புக்கு அமெரிக்கா வழங்கும் நிதி அனைத்தும் நிறுத்தி வைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

உலகில் உள்ள அனைத்து நாடுகளையும் விட உலக சுகாதார அமைப்புக்கு அமெரிக்கா தான் அதிக நிதி வழங்குகிறது என்பது

## கொரோனா தடுப்பூசி வர ஒரு வருடமாவது ஆகும்

### உலக சுகாதார நிறுவனம் தெரிவிப்பு

வேகமாக பரவிவரும் கொரோனா வைரஸுக்குத் தடுப்பூசி கண்டுபிடிப்பதற்கு குறைந்தது ஒரு வருடம் ஆகலாம் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசியைக் கண்டுபிடிக்க பல்வேறு நாடுகள் தீவிர ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் உலக சுகாதார அமைப்பின் கருத்து வெளிவந்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பின் செய்தி தொடர்பாளர் மார்க்ரெட் ஆரிப் கூறியதாவது:-

கொரோனா தடுப்பூசியைக் கண்டுபிடிக்கும் சோதனை பல நாடுகளில் ஆய்வு கட்டத்திலேயே உள்ளது. இதனால் தடுப்பு ஊசியை கண்டுபிடிக்கக் குறைந்தது ஒரு வருடம் ஆகலாம்.

உலக அளவில் கொரோனா வைரஸ் 90 சதவீதம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பரவி உள்ளது.

இத்தாலி, ஸ்பெயினில் புதிதாகப் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வந்தாலும் இங்கிலாந்து, துருக்கியில் கொரோனா வைரஸ் அதிவேகத்தில் பரவி வருகிறது.- இவ்வாறு அவர் கூறினார்.

## பயங்கர காட்டுத் தீயில் சிக்கி மெக்சிக்கோவில் 9 பேர் சாவு



மெக்சிகோ நாட்டின் மேற்கு பகுதியில் ஏற்பட்ட பயங்கரக் காட்டுத்தீயில் சிக்கி பழங்குடியினத்தைச் சேர்ந்த 9 பேர் உயிரிழந்தனர்..

நாட்டின் மேற்குப் பகுதியில் இந்தப் பயங்கரக் காட்டுத் தீ பரவியது. மேற்கு மாகாணமான ஒசாகாவில் உள்ள சாண்டோஸ் ரெய்ஸ் டெபெஜிலோ என்ற இடத்தில் இந்த அடர்ந்த காடு உள்ளது. இந்த காட்டுக்குள் பழங்குடியினத்தைச் சேர்ந்த மக்கள் பலர் வசித்து வருகின்றனர்.

ஒசாகா மாகாணத்தின் சாண்டியாகோ ஜுக்ஸ்ட்லா ஹூவாக்கா எனும் கிராமத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு திடீரென தீப்பிடித்தது. காற்றின் வேகம் காரணமாக இந்த தீயானது, சாண்டோஸ் ரெய்ஸ் டெபெஜிலோவில் உள்ள காட்டுப் பகுதிக்கும் பரவியது.

வறண்ட வானிலை காரணமாகக் காட்டுத் தீ வேகமாகப் பரவியது. பல ஏக்கர் பரப்பளவில் காட்டுத் தீ மளமளவெனக் கொழுந்துவிட்டு எரிந்தது. இதனால் அந்தக் காட்டுக்குள் வசித்து வந்த பழங்குடியின மக்கள் பலர் தீயில் சிக்கிக்கொண்டனர்.

நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் வரவழைக்கப்பட்டு காட்டுத்தீயை அணைக்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. காட்டுக்குள் சிக்கியிருந்த பழங்குடியினமக்களை மீட்கும் பணியில் இராணுவத்தினரும் களம் இறக்கப்பட்டனர்.

தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடி 75 சதவீத காட்டுத்தீயை அணைத்தனர். எனினும் அதற்கிடையில் பழங்குடியினத்தைச் சேர்ந்த 9 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். சுமார் 300 பேர் மீட்கப்பட்டு பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். காட்டுத்தீயை முழுமையாக கட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## நியூயோர்க்கில் மட்டும் சாவு 10 ஆயிரத்தை தாண்டியது!

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் மட்டும் கொரோனாவைரஸ்பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அமெரிக்கா முழுவதும் 26 ஆயிரத்து 64 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 10 ஆயிரத்து 834 பேர் நியூயோர்க் நகரில் உயிரிழந்திருக்கின்றனர். அங்கு இரண்டு லட்சத்து 3 ஆயிரத்து 123 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

ஆனால் நியூயோர்க்கில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகம் என்று அமெரிக்க ஊடகங்கள் சந்தேகிக்கின்றன. பரிசோதனை செய்யப்படாத நிலையில் கொரோனா அறிகுறிகளுடன் பலர் இறந்துள்ளனர் என்றும் அவர்களையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்றும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸுக்கு 20 லட்சத்து 5 ஆயிரத்து 542 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டெழ பிரபலங்களை உள்ளடக்கிய பெரும் குழு!

## நியமித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்

கொரோனா வைரஸ் தொற்றால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்கா தனது பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுவதற்காக பொருளாதார புத்தாக்க மீளெழுச்சித் தொழிற்துறைக் குழு ஒன்றை 200 முன்னணி பெருநிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் உருவாக்கியுள்ளார்.

இந்தக் குழுவில் அப்பிள், கூகுள், முகப் புத்தகம், மைக்ரோ சொஃப்ட், ஐபிஎம் ஆகியவற்றின் தலைவர்கள், பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் அடங்கியுள்ளனர்.

இவர்கள்தான் அந்தப் பெயர்கள், இவர்கள்தான் புத்திசாலியானவர்கள், பிரகாசமானவர்கள், இவர்கள்தான் நமக்குப் புதிய யோசனைகளை வழங்கவுள்ளனர் என்றார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

இந்தப் பெரும் குழுவில் கூகுள் நிறுவனத் தலைவர் சுந்தர் பிச்சை, மைக்ரோ சொஃப்ட் நிறுவனத்தின் சத்யா நாதெள்ளா ஆகியோருடன் ஐபிஎம் நிறுவனத்தின் அரவிந்த் கிருஷ்ணா, மைக்ரான் நிறுவனத்தின் சஞ்சய் மெஹ்ரோத்ரா, ஆப்பிள் நிறுவனத்தின் டிம் குக், ஆரக்கிள் நிறுவனத்தின் லாரி எலிசன், ஃபேஸ்புக்கின் மார்க் ஸுக்கர்பர்க் ஆகியோர் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவில் உள்ளனர்.

நிதிச்சேவையில் மாஸ்டர் கார்டிலிருந்து அஜய் பங்கா, வீசா கார்ட்டிலிருந்து அல் கெல்லி, உள்ளிட்டோர் ஆலோசனைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதோடு வேளாண்மை, வங்கித்துறை, கட்டுமானம்/ தொழிலாளர் துறை, பாதுகாப்பு, எரிசக்தி, நிதிச் சேவைகள், உணவு மற்றும் பானங்கள், ஆரோக்கியம், உல்லாச விடுதி மற்றும் விருந்தோம்பல் துறை, உற்பத்தி, ரியல் எஸ்டேட், சில்லரை விற்பனை, தொழில்நுட்பம், தொலைத் தொடர்பு, போக்குவரத்து, விளையாட்டு, மற்றும் சிந்தனை தலைவர்கள் முதலியோரை பொருளாதார புத்தெழுச்சிக்காக அறிவித்துள்ளார் அதிபர் ட்ரம்ப்.



அமெரிக்காவின் ஆரோக்கியமும் செல்வமும் முதன்மை குறிக்கோள், இந்த ஆலோசனைக் குழு தனித்துவ, சுதந்திர, தன்னிறைவு மற்றும் உறுதியான தேசத்தை உருவாக்குவார்கள் என்று வெள்ளை மாளிகை தன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# சவாலான காலம் இது கூறுகின்றார் ரணில்

கொழும்பு, ஏப். 15

முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க, கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தும் அரசின் மற்றும் சுகாதார அதிகாரிகளின் முயற்சிகளுக்குப் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில் –

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவர மீண்டும் மீண்டும் சோதனை செய்வது போன்ற ஜேர்மனியில் பின்பற்றப்படும் நடைமுறைகளை இலங்கை பின்பற்றவேண்டும்.

பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடுவதற்கு விதிக்கப்பட்ட பூட்டுதலை இலங்கை ஓரளவு நீக்க வேண்டும்.

உலகப்போர் மற்றும் பிற நெருக்கடிகளுடன் ஒப்பிடும்போது, கொரோனா வைரஸினால் உலகம் எதிர்கொண்ட மிகவும் சவாலான காலம் இது.

இலங்கையில் சோதனைகளை மேற்கொள்ளத் தேவையான உபகரணங்கள் உள்ளதா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஆரம்பத்தில் சோதனை செய்யும் உபகரணங்கள், வென்



டிலேட்டர்கள் மற்றும் முகமூடிகளை பெற அரசு தவறிவிட்டது – என்றார்.

# வெளிநாட்டில் சிக்கியுள்ள இலங்கையர் படிப்படியாகவே அழைத்து வரப்படுவர்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 15

கல்வி மற்றும் இதர தேவைகளுக்காக சென்று இப்போது வெளிநாட்டில் இருந்து இலங்கை வர விரும்பும் இலங்கையர்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. ஆனால் அதை முகாமைப்படுத்தப்பட வேண்டும். விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால் வெளியில் இருந்து ஆட்கள் வருவது குறைவு. எனவே அதற்கு முன்னர் இங்கு நிலைமை கட்டுப்படுத்தப்படவேண்டும். கூடிய விரைவில் அவர்களை வரவழைப்போம். அதற்கு முன்னர் இங்குள்ள நிலைமையை சுமூகமாக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க.

இன்று காலை ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நேற்று வைரஸ் அடையாளம் காணப்பட்டவர்கள் யாருக்கும் தொற்று இருப்பதாக முன்னர் அறிகுறிகள் இல்லை. அவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே அவர்களுக்கு தொற்று இருப்பது தெரியவந்தது. கடந்த ஐந்து நாட்களாக சமூகத்தில் புதிதாக யாருக்கும் தொற்று இருப்பதாக கண்டறியப்படவில்லை. எனவே தனிமைப்படுத்தல் மூலம் வைரஸ் பரவலை தடுத்துள்ளோம் -என்றார்.

# முதலை மடக்கி பிடிப்பு!

மட்டக்களப்பு, ஏப். 15

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமீன்மடுவில் மக்களின் குடியிருப்புக்குள் புகுந்த முதலையொன்று மக்களினால் பிடிக்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமை அதிகாலை பாலமீன்மடு, தண்ணிக்கிணற்றடி வீதியில்உள்ள வீடு ஒன்றில் புகுந்த முதலையே இவ்வாறு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த முதலை மக்களின் குடியிருப்புகளுக்குள் புகுந்து ஆடு,கோழிகளை பிடித்து வந்த நிலையில் இன்று அதிகாலை குடியிருப்புக்குள் வைத்து அதனை அப்பகுதி இளைஞர்கள் பிடித்தனர்.

இரண்டு முதலைகள் இவ்வாறு பிரதேசத்தில் நடமாடி திரிவதாகவும் ஒன்று பிடிக்கப்பட்டுள்ள நிலையில் மற்றையதையும் பிடிக்க நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த முதலையானது சுமார் 07அடி நீளம் கொண்டதாகக் காணப்பட்டது.

அப்பகுதிக்கு வந்த வனஜீவராசிகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பதிகாரி கே.சுரேஸ் தலைமையிலான குழுவினர் முதலையை மீட்டு பாதுகாப்பாக நீர்நிலைக்குக் கொண்டு சென்றுவிடும்நடவடிக்கையை மேற்கொண்டனர்.



# நுரளையில் தொற்று இல்லை

நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என நுவரெலியா மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் கொரோனா வைரஸ் அதிகம் பரவும் மாவட்டங்களாக பெயரிடப்பட்டுள்ளன.

ஏனைய 19 மாவட்டங்களில் எந்தவித பாதிப்பும் இல்லை என சுகாதாரபிரிவினர் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் நுவரெலியா மாவட்டத்திலும் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், அபாய வலயத்திற்குள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட எவரும் இதுவரை உறுதி செய்யப்படவில்லை என சுகாதார பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதுவொரு போலியான தகவல் எனவும் இது குறித்த நுவரெலியா மக்கள் அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை எனவும் நுவரெலியா மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் இராணுவ ஊடகப் பேச்சாளர் அறிவித்துள்ளனர்.

# தன் தாய் மாமனைச் சுட்டு கொலை செய்த மருமகன்

தனது தாயின் சகோதரரை சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என மஹாஓய பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். இந்தத் துப்பாக்கிச் சூடு நேற்று இரவு இடம்பெற்றதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இறந்தவருக்கும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து அந்த நபர் தனது சகோதரனுடன் சேர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவரின் தாயாரின் சகோதரனே சம்பவத்தில் பலியானார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில். 23 வயதுடைய இளைஞன் மற்றும் அவரது 22 வயதுடைய சகோதரனைக் கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikathir

குருவிக் கூடு

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது



தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளைய (16/04/2020) தலைப்பு
குருவிக் கூடு

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# நடுக்குடா காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டத்தை மக்களைப் பாதிக்காத வகையில் முன்னெடுக்கப்படுமாம்!



நடுக்குடா காற்றாலை மின் உற்பத்தி வேலைத் திட்டத்தை மக்களைப் பாதிக்காத வகையில் முன் னெடுத்து நடைமுறைப்படுத்த ஒத்துழைப்புக் கோரப் பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் இன்று புதன் கிழமை மதியம் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையி லேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் தொடர்பில் தீர்மானிக்கப் பட்டது. மன்னாரில் வெவ்வேறு விலைகளில் அத்தி யாவசிய உணவுப்பொருள்கள் விற்கப்படுகின்றன என முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதற்கு அமைவாக நிவாரண உதவிகளுக்கு வெள்ளைச் சம்பா, வெள்ளை நாடு அரிசி ஆகிய இரண்டும் 95 ரூபாவிற்கு விற்பனை செய்யவும், சில்லறை விலைக்கு 100 ரூபாவிற்கும் விற்பனை செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டம் முழுவதும் இந்த விலைதான் பின்பற்றப் படும்.

மேலும் சிவப்பு கீரிச் சம்பா 100 ரூபாவிற்கும், வெள்ளை கீரிச்சம்பா 115 ரூபாவிற்கும் மொத்த மாக கிடைக்கும்.

சில்லறை வியாபரத்திற்கு சிவப்பு கீரிச் சம்பா 115 ரூபாவிற்கும், வெள்ளை கீரிச்சம்பா 120 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படும்.

மக்களின் நாளாந்த தேவைகளுக்கு குறித்த விலைகளில் விற்பனை செய்யப்படும். குறித்த கட் டுப்பாட்டு விலைகளை மீறி விற்பனை செய்ய முடியாது என தீர்மானிக்கப்பட்டது.

மேலும் நிவாரணங்களுக்காக முக்கிய பொருள் களை வழங்குமாறு கோரியுள்ளோம்.

மேலும் மக்கள் விரும்பினால் மாத்திரம் வெங்கா யம் மற்றும் உருளைக்கிழங்கு போன்றவற்றை வழங்க வேண்டும்.

அரிசி, மா,சீனி, சோயா மீற் பக்கட், தேயிலை, சவர்க்கார வகைகள் போன்றவை அவசியமாக வழங்கப்பட்ட வேண்டும். நிவாரண செயற்பாடுகளை மன்னார் மாவட்டத்தில் ‘சதொசா’ மற்றும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினூடாக மேற்கொண்டு வரு கின்றோம்.

சதொசா விற்கு பொருள்களின் வருகை குறை வாக உள்ளமையினால் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினையும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட பணித்துள்ளோம்.

மேலும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த காலங்களில் முழுமையாக செயற்படாததன் காரணத் தினால் அவர்களின் கொள்வனவு சக்தி மிகவும் குறைவாக காணப்படுகின்றது. மாந்தை வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஏனைய சங்கங்களுக்கு 10 இலட்சம் ரூபாவும் நிவாரண பொருள்களை கொள் வனவு செய்ய முற்பணமாக வழங்கி வைத்துள் ளோம்.

மேலும் நிறுவனங்களினால் மக்களுக்கு வழங் கப்படுகின்ற உலர் உணவு பொருள்கள் எவ்வித பாரபட்சமும் இன்றி சமய ரீதியாகவும்,மொழி ரீதி யாகவும் பார்க்காது வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறு சீராக பங்கிட்டு கொடுப்பவர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்குவோம். தேர்தல் ஆணைக் குழுவின் பணிப்புரைக்கு அமைவாக அரசியல் ரீதி யான முறையில் உலர் உணவு விநியோகங்கள் வழங்கப்பட முடியாது.

நடுக்குடா காற்றாலை மின் உற்பத்தி தொடர்பாக அதன் திட்ட பணிப்பாளர் என்னுடன் கலந்துரையா டினார். குறிப்பாக அவர்கள் கூடுதலான வாக்குறுதி வழங்கி உள்ளனர்.

மக்களை பாதிக்காத வகையில் இத்திட்டத்தை முன்னெடுத்து நடை முறைப்படுத்துவதாகவும் தெரி வித்து அதற்கு எங்களுடைய ஒத்துழைப்பைக் கோரியுள்ளனர்.

உரிய அனுமதிகளுக்கு அமைவாக அந்த வேலைத்திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின் றது. ஜனாதிபதியின் விசேட செயலணியின் பணிப் பிற்கு அமைவாக அந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்த அனுமதி வழங்கி உள்ளோம்.

எனினும் மக்களை பாதிக்காத வகையில் கட்டுப் பாடுகளுக்கு அமைவாக குறித்த செயல்பாடு முன் னெடுக்கப்பட உள்ளது. இராணுவம் மற்றும் பொலி ஸாரின் பூரண பாதுகாப்பு அந்தப் பகுதிக்கு வழங் கப்பட்டுள்ளது. – என அவர் மேலும் தெரிவித்தார்.

# நான்கு லட்சம் ரூபா பெறுமதியான 7 ஆயிரம் கிலோ மரக்கறிகள் வீண்

## அழுகி நாசமாகின என விசனம்





திருகோணாமலை, கந்தளாய் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில், சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதி யான ஏழாயிரம் கிலோகிராம் மரக்கறிகள், அழுகிய நிலையில், இன்று மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில், படம் எடுக்கம் சென்ற ஊடகவிய லாளர்களுக்கும் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவருகிறது.

கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதி மக்களுக்கு, குறைந்த விலையில் விற்பனை செய்வதற்காகக் கொண்டுச்செல்லப்பட்ட மரக்கறிகளே, கந்தளாயிலுள்ள எம்.கே.ஏ.டி.எஸ்.குணவர்த்தன நகர மண்டபத்திலிருந்து அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட மரக்கறிகளில், கரட், கோவா, ராபு, லீக்ஸ், பூசனிக்காய், போஞ்சி போன்ற மரக்கறிகள் அதிகம் காணப்பட்டன என்றும் இவை சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியானவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கந்தளாய் பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம், முறையாக முன்னெடுக்கப்படாத தால், மரக்கறிகள் பிரயோசனமற்று போயுள்ளன என்று, பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அழுகிய மரக்கறிகள் தொடர்பாக படம் எடுப்பதற்காக சென்ற ஊடகவியலாளர்களுக்கு கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டதாக தெரியவருகிறது.






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கட்சித் தலைவர்களைக் கூட்டி ஊடகங்களைச் சந்திக்கும் சஜித்தின் எத்தனத்துக்குப் பதில் பொலிஸ் மாஅதிபர் தடை





நாட்டில் ஏற்பட்டிருக்கும் தற்போதைய நிலைமைகள் குறித்து கட்சித் தலைவர்கள் மாநாடு ஒன்றை கூட்டி ஊடக சந்திப்பை நடத்த, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கோரிக்கையை பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன நிராகரித்துள்ளார்.

இந்த நிராகரிப்பு குறித்த விளக்கக் கடிதமொன்றையும் பதில் பொலிஸ்மா அதிபர் சஜித் பிரேமதாஸவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:–

இலங்கையில் தீவிரமாகப் பரவ ஆரம்பித்துள்ள கொரோனா வைரஸிற்கு இதுவரை 7 பேர் பலியாகியுள்ள நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 250ஐ அண்மிக்கின்றது.

இந்த நிலையில், கட்சித் தலைவர்கள் மாநாடொன்றை கூட்டி, விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி நிலைமையை மக்களுக்கு விளங்கப்படுத்துவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி கட்சித் தலைவர்கள் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்து வந்தது.

இதற்கான அனுமதிக் கோரிக்கை ஒன்றையும் சஜித் அணியினர் பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவுக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளனர். எனினும் சஜித் அணியினரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை பதில் பொலிஸ்மா அதிபர் நிராகரித்துள்ளார்.

இந்த நிராகரிப்பு கடிதத்தை சஜித் அணியினருக்கு அனுப்பிவைத்துள்ள பொலிஸ்மா அதிபர், அந்தப் பதிலில் கொரோனா வைரஸ் பரவும் அச்சுறுத்தல் இருப்பதால் சுகாதாரத்துறையினரால் வழங்கப்பட்ட அறிவுரைக்கு அமைய கூட்டங்கள், சந்திப்புக்கள் மற்றும் போக்குவரத்துக்கள் செய்யக்கூடாது என்பதன் அடிப்படையில் இந்தக் கோரிக்கையை தாம் நிராகரிக்கிறார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கொரோனா வைரஸினால் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் அளிக்காத நிலையில், உதவிகளை செய்து வரும் ஐக்கிய தேசியக் கட்சியினரை அரசாங்கம் கைது செய்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிரணியினர் தெரிவித்து வருகின்றனர். இப்படியான நிலையிலேயே சஜித் அணியினரது கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ரஞ்சன், பாலிதவின் பணிகளை தடுக்க திட்டமிட்ட நடவடிக்கை

## அரசு மீது மத்துமபண்டார குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப்.15

மக்களுக்காக மனிதாபிமான ரீதியில் பணிகளை தொடரும் எதிர்க்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சன் ராமநாயக்க, பாலித தெவரப்பெரும ஆகியோரின் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் நேரடியாகவே தடையை ஏற்படுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித்மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இது ரஞ்சனை கைதுசெய்துள்ளதன் மூலமாகவும் பாலித தெவரப்பெருமவை கைதுசெய்ய முயற்சிப்பதன் ஊடாகவும் புலனாவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, போலிக் குற்றச்சாட்டுகளின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை உடனடியாக விடுதலை செய்யுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையரை அழைத்து வருவதற்கான நடவடிக்கை

கொரோனா தொற்றுக் காரணமாக விமான சேவைகள் பல இரத்துச் செய்யப்பட்டுள்ளமையால், இலங்கைக்கு வரமுடியாமல் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான விசேட வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலணியுடன் நீண்ட கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளமையுடன், முதலில் எந்த நாட்டிலுள்ளவர்களை அழைத்து வருவது என்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தன் இரு பிள்ளைகளைக் கிணற்றினுள் வீசி கொலை செய்த தந்தை விளக்கமறியலில்!

மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவடிச்சேனை பகுதியில் தனது இரண்டு பிள்ளைகளை கிணற்றினுள் வீசிக் கொலை செய்த நபரை பதினான்கு நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை மாவட்ட நீதிவான் எச்.எம்.முஹமட் பஸீல் உத்தரவிட்டுள்ளார்.

மாவடிச்சேனை பாடசாலை வீதியில் வசிக்கும் அஸிமுல் ஹக் வயது 10, அஸிமுல் தாஹியா வயது 07 ஆகிய இரண்டு குழந்தைகளை அவர்களின் தந்தை நேற்றைய தினம் நள்ளிரவு தனது வீட்டு கிணற்றில் தூக்கி எறிந்து கொலைசெய்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளை கொலை செய்த குற்றத்தில் அவர்களது தந்தையான முகம்மது லெப்பை சுலைமா லெப்பை வயது 46 என்பவர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் வாழைச்சேனை பொலிஸாரால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்ட போதே அவரைப் பதினான்கு நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மரணமடைந்த இரண்டு குழந்தைகளின் சடலங்களும் வாழைச்சேனை நீதிவானின் உத்தரவிற்கமைய மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட சட்ட வைத்திய அதிகாரி விசேட விடுமுறையில் உள்ள நிலையில் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை சடலங்கள் உறவினர்களிடம் வழங்கப்படவுள்ளன என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ஓட்டோ சாரதிகளுக்கும் ஐயாயிரம் ரூபா

நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் அன்றாடம் தமது தொழில் வாய்ப்புக்களை இழந்தவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன் அடிப்படையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக அன்றாடம் தங்களது தொழில் வாய்ப்புக்களை இழந்த ஓட்டோ சாரதிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவை வழங்கும் சாரதிகளுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவைப் பெறத் தகுதியுள்ள நபர்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால் பலர் தொழில் வாய்ப்புக்களை இழந்து பல சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் ஒருவர் பலி இருவர் காயம்

மஹியங்கனை தலுகான வீதியின் தலுகான குளக்கட்டு பகுதியில் மூவர் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியதில், ஒருவர் பலியானர், இருவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில், மகுல்தமன பெலடியாவ பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிண்ணியாவில் நால்வர் கைது

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில், ஊரடங்குச்சட்டத்தை மீறினார் என்றக் குற்றச்சாட்டில் இருவரையும் கஞ்சா வைத்திருந்தக் குற்றச்சாட்டில் இருவரையும், பொலிஸார், இன்று கைதுசெய்துள்ளனர்.

கஞ்சா வைத்திருந்தக் குற்றச்சாட்டில் கைதான இருவரிடமிருந்து, 500 மில்லிகிராம் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி நால்வரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.04.2020 இல் வெளியிடப்பெற்றது.